
# தேவதாயின் குரல்

"இறுதியில் எனது மாசற்ற இருதயம் வெற்றி கொள்ளும்"

குரல்: 2 யாழ்ப்பாணம் ஜனவரி 1997


## யேசுவை அறிய... அன்பு செய்ய... பகிர...



**ஆசிரியர் உரை :**

ஓர் புத்தாண்டு மலர்ந்துள்ளது. பாப்பிறையின் பணிப்பின்படி யேசுவை இன்னும் அறிய, அன்பு செய்ய பகிர்ந்து கொள்ள கொடுக்கப்பட்ட ஆண்டு இது.

ஆண்டின் முதல் நாளே, இறைமகன் யேசுவை நமக்களித்தவளின் திருவிழா. வெளி விழாக்கள் பல கண்டு, அவற்றின் வெறுமையை உணர்ந்தவர்கள் நாம். நாம் வாழும் மரண பயத்தின் வீட்டிலிருந்து, அன்பின் வீட்டுக்குள் வருமாறு அழைத்து நிற்கிறாள் அன்னையவள்.

வெளியே எல்லாம் அழிவுறலாம்; நிலை குலையலாம் ஏரோதின் அரண்மனை போன்றும் முழு யெருசலேம் போன்றும் ஞானிகள் வருகையினாலும் குழந்தைகள் கொலையாலும் அன்று பெத்தலகேமில் கேட்ட அழுகுரல் போன்று இன்றும் இங்கு கூக்குரல் கேட்கிறது. பேரழுகையும் ஒப்பாரியுமாக இருக்கிறது.

இது, தன் குழந்தைகளுக்காக அழுது கொண்டு ஆறுதல் பெறாத மண்

இந்த அழுகுரல்கள், வசதியீனங்கள் மத்தியில், அமைதி ஒளி, சகோதரத்துவ அன்பு, ஆடு மாடு, கழுதை, புல்வெளி, இடையர், ஞானிகள், நட்சேத்திர வெளி, தூயவானவர் நடுவில் இறுகிப் மின்னுகிறது. தூய மனத்தவரின் ஆனந்தம், அக்கந்தைத் துணிகளிடையே கூட பிரகாசிக்கிறது.

இதன் இரகசியத்தை அறிவதே, இவ்வாண்டின் பெரும் யாத்திரை அவரை அறிய அன்பு செய்ய பகிர நன்குணர்ந்தவர்கள் மரியாளும் சூசையுமே, பயத்தின் வீட்டிலிருந்து. அன்பின் வீட்டுக்குச் செல்லும் பாதை அவர்களுக்கு நன்கு தெரியும். அன்பு பயத்தை அகற்றுகிறது

யேசுவை அறிய, செபம் அவசியம் திருமறை வாசிப்பு அவசியம் பலர் யேசுவைப் பற்றிய நூல்களை, இறையியல் எழுத்துகளை, ஆய்வுகளை வருடக்கணக்காக படிக்கின்றனர். ஆனால் யேசுவை உண்மையாக அறிய இது போதாது

புனிதர் அகுஸ்தீன், ஓர் ரோம பேராசிரியர், பல பல்கலைக்கழகங்களில் உண்மை அறிவைத் தேடி அலைந்தவர். யேசுவைப் பற்றி அறிந்தார். ஆனால் மிலான் நகர ஆயர் புனித அம்புறோசின் வழி நடத்துதலே, யேசுவைப் பற்றிக் கொள்ளும் அறிவை அவருக்குப் பெற்றுத் தந்தது.

இதனாலேயே புனித சின்னப்பர் "என் ஆண்டவராம் கிறிஸ்துவைப் பற்றிய அறிவே நான் பெறும் ஒப்பற்ற செல்வம். கிறிஸ்துவை ஆதாயமாக்கிக் கொள்ளவும் அவரோடு ஒன்றித்திருக்கவும் அனைத்தையும் குப்பையாகக் கருதுகிறேன்" என்றார். (பிலிப் 3 : 8 - 9)

எனவேதான் யேசு பற்றிய அறிவை, அனுபூதி நிலையாகவே கொண்டு, கிறிஸ்தவ துறவிகள் திருமறை வாசகம், சிந்தனை, செபம், தியானம் என நான்கு படிகள் ஆக்கினார் நாம் எல்லோரும் இத்தியான நிலைக்கு அழைக்கப்படுகின்றோம்.

இவ்விறுதி யுகத்தில், இம் மண்ணில் வாழும் கிறிஸ்தவர்களை பூரண தியான நிலைக்கு அழைக்கும் அடையாளங்களாகவே இன்றைய போர்க்கால அனர்த்தங்களை விளங்கிக் கொள்வோமாக

எனவே 1997 ம் ஆண்டில், புனிதத்தின் பூரண சூரியனான யேசுவை, புனிதத்தின் பூரண குளிர் நிலவான தேவதாய் வழியாக அறிந்து, புனித மக்களாக மாறி, புதிய வானகமும் வையகமும் கொண்ட புதிய ஜெருசலேமை நோக்கிச் செல்வோமாக.

### கத்தோலிக்க பரவச தியான மரபில் தேவதாயின் அற்புத வரலாறு

இன்றைய போர் எம்மை வெறும் துன்ப துயரங்களுக்கு மாத்திரமல்ல, மரண வேதனைகளுடாக புதிய வானகம், புதிய வையகத்திற்குள்ளும் நுழைய அழைக்கிறது. கத்தோலிக்க தியான வாழ்வின் குறிக்கோளும் இதுவே.

இதன் முன்னறிவிப்பே மரியாள். மானிட வரலாற்றின் மிகக் கொடூரமான நவீன போர்யுக ஆரம்பத்தில் (1834, 1858, 1917 ) தேவதாய் தன் தரிசனங்களுடாக, இப்போர்களினால் விளையக் கூடிய பேரழிவையும், ஆன்ம நாசத்தையும், வெளிப்படுத்தினாள்.

அதேவேளையில் தன் அரவணைப்புக்குள் வரும் குழந்தைச் செல்வங்களுக்கு, வரும் ஆறுதல்களையும் மூவொரு கடவுளின் வழி இணைக்கும் ஆனந்த அருளையும் அறிவித்தாள். இதையே பரவச தியானத்திற்கு அழைப்பு என்கிறோம். ( ஆசிரியர் உரை பக் 1 )

ஆண்டவன் யேசுவின் தாய் கத்தோலிக்க வரலாற்றில் தொன்று தொட்டு, பரவச தியான நீரோடையில் மூழ்கினோருக்கு அருகே நின்று வழிகாட்டியவள்.

அவளை கார்மேலின் வில்லி, சாரோலின் ரோஜா என்றழைக்கும் மரபு, எலியாவின் கார்மேல் பர்வத ஆதிக் கிறிஸ்தவத் துறவிகளிடையே முளை விட்டுப் பிறந்தது. கப்படோக்கிய தியானிகளிடையேயும், புனித அகுஸ்தீனாரிடமும் வேர்விட்டு வளர்ந்தது.

மத்திய காலங்களில் மேற்கத்திய துறவிகளான பொனவெஞ்சர், பேர்னாட், சைமன்ஸ்ரொக், டொமினிக் முதலியோரின் மரியாளின் பக்திப் பரவசங்களின் பின்னணியில், ஸ்பானிய கத்தோலிக்க மறுமலர்ச்சியின் சுவையான கனிகளான சிலுவை அருளப்பர், அவிலா திரேசாள் போன்றோர் தோன்றினர்.

இக் கார்மேல் பரவச தியானிகளால் கவர்ந்திழுக்கப்பட்ட, வேறு பலருள் ஒருவரான அகிராடா மரியாளின், பரவச தியான காட்சிகளில் தேவதாயின் வாழ்வு நிகழ்வுகள் சித்தரிக்கப்படுவதை

( 4 ம் பக்கம் பார்க்க )

# பத்திமாவில் தேவதாயின் வேண்டுகோள்

பத்திமாபதியில் தேவதாய் தோன்றி, ஒரு புதிய சாத்விகப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளார். இதை உலகு எவ்வளவு தூரம் உணர்ந்துள்ளது?

இப் போரின் இறுதியில் வெற்றி நிச்சயம் என்பது உறுதி; எனினும் அதற்கு முன் அதிக துன்பம் அனுபவிக்கப்படவேண்டும்; அதிக இரத்தம் சிந்தப்படவேண்டும் என்பதை அன்னை மரியாள் குறிப்பாக உணர்த்தியுள்ளாள்.

ஞான முறையில் வளர்ந்துள்ள ஒரு புற்றுநோய்ப் பருவை, பக்குவமாக எப்படி வெட்டி எடுக்க வேண்டும் என்று ஒரு கைதேர்ந்த வைத்தியரைப் போல, நிச்சயமான மொழிகளில், தேவதாய் கூறியுள்ளாள்.

நாம் ஒப்புக் கொடுக்கும் செபங்கள் தாழ்ச்சியும் வணக்கமும் உள்ளவையாக மட்டுமல்ல, பரம தந்தையின் சித்தத்தை ஏற்றுச் செயற்படுத்தும் தன்மையையும் பெற்றிருக்க வேண்டும்.

(மத். 7: 21)

நன்றாகச் செபிக்கும் செபங்கள் தரும் நற்பயன்களுள் அருள் மிகுந்த நிலையும் ஒன்று. இந்நிலை உயர, விசுவாசம், நம்பிக்கை, தேவசினேகம் ஆகியவை வளர்ச்சி அடைகின்றன. தூய ஆவியின் அருட்கொடைகளும் எம்மில் நிறைவாகப் பொழியப்படுகின்றன.

மேலும் செபங்கள் நம்முடைய பாவங்களுக்குரிய பரிகரிப்பைத் தீர்த்து வைப்பதால், உத்தரிப்பு நிலை குறைக்கப்படுகிறது. செபங்கள் எமக்குமட்டுமல்ல நம் அயலவருக்கும் அருட்கொடைகளையும் உலக நலன்களையும் பெற்றுத் தருகின்றன.

இவைகளை மனதிலிருத்தியபின் தேவதாய் பத்திமாவில் விடுத்த வேண்டுகோளை சுருக்கமாக நோக்குவோம்.

## 1. மரியாயின் மாசற்ற இருதயப் பக்தி:

மிகப் பழைய காலத்திலிருந்தே புனிதர்களும் வேத வல்லுநர்களும் (அகுஸ்தின், எப்ரேம், பேர்னாட், பொனவஞ்சர், அல்போன்ஸ், லூயிஸ் தே மொன்பர்ட்) மாமரி வழியாக ஆண்டவனை அடைதல் மிக உத்தமமான வழி என்று கூறியுள்ளனர்.

ஆபிரகாமும் மோயீசனும் மற்றும் குலமுதுவர்களும் இறை வாக்கினரும், மக்களுக்காக இறைவனிடம் பரிந்துரைத்திருக்கின்றனர். இறைமகனின் அன்னையாகத் தெரியப்பட்ட, பரலோக பூலோக அரசியின் பரிந்துரை, இவர்களை விட மிகமிக முக்கியமானதல்லவா?

''மாமரி மீது உண்மையான பக்தி' என்ற நூலில் புனித மொண்பர்ட் கூறுவது ''கிறிஸ்தவர்கள் தங்களை யேசுவுடன் ஐக்கியப்படுத்த விரும்பினால் அதற்குரிய எளிதான, பாதுகாப்பான, உத்தமமான, உறுதியான வழி மரியாள் காட்டிய பாதையில் செல்வதே.''

தமது மாசற்ற இருதயத்துக்கு எம்மை அர்ப்பணித்து விடக் கேட்கும் மரியன்னை, அதன்வழி எம்மை மிக ஒளி பொருந்திய அன்பின் பாதைக்கு அழைக்கின்றாள்.

மரியன்னையின் மாசற்ற இருதயத்துக்கு, எம்மை முற்றாக அர்ப்பணித்தபின், அப் பக்தியை முறையாக அனுசரிக்க முயற்சிப்போம்.

ஐந்து முதற் சனிக்கிழமைகளில் தொடர்ந்து இப்பக்தியை அனுசரிப்பவர்களின் மரண வேளையில் தாம் உதவியளிப்பதாகவும் அவர்களின் இரட்சணியத்துக்கு வேண்டிய அருள்வளங்களை நிறைவாக அருளுவதாகவும் பத்திமா காட்சிகளில் மரியன்னை கூறியுள்ளார்.

பாவசங்கீர்த்தனம் செய்து, அருள் நிலையில் முதற் சனித் திருப்பலியில் பங்குபற்றுதல், எம்முடையவும் உலகோருடையவும் பாவப் பரிகாரமாக நற்கருணை அருந்துதல், செபமாலையின் ஐந்து தேவ இரகசியங்களைச் செபித்தல், பதினைந்து நிமிடங்களாவது செபமாலையின் பதினைந்து தேவ இரகசியங்களைத் தியானித்தல் என்பன முதற் சனிக்கிழமைப் பக்தியாகும்.

தொடர்ந்து ஐந்து முதற் சனிக்கிழமைகளோடு நின்று விடாது ஒவ்வொரு முதற் சனியும் தொடர்ந்து இப் பக்தியை அனுசரித்தல் அன்னையின் வேண்டுகோள்கள் நிறைவேற உதவுமல்லவா?

## 2. செபமாலை செபித்தல்:

தினசரி செபமாலை செபிக்குமாறு உலகின் பல பாகங்களிலும் தாம் தந்த தரிசனங்களில் கூறியுள்ள மரியன்னை, தமது இரு பெரும் காட்சிகளிலும் (லூர்து 1858, பத்திமா 1917) இதை வற்புறுத்தியுள்ளார்.

செபமாலை ஓதுவதன் பலனை கத்தோலிக்க திருச்சபையினர் பல நூற்றாண்டுகளாக அனுபவித்து வந்துள்ளனர்.

செபமாலையின் தியானங்களில் கிறிஸ்துவின் வாழ்க்கைப்பாதையில் நடந்து செல்கிறோம். எனவே கிறிஸ்துவை அறிய, அவரை அன்பு செய்ய அவரைப் பகிர்ந்து கொள்ள செபமாலை ஒரு உத்தம வழியாகிறது.

பத்திமாவில் தந்த ஆறு காட்சிகளிலும் செபமாலையைத் தினமும் செபிக்குமாறு வற்புறுத்திய மரியன்னை, இறுதிக் காட்சியில் தம்மை 'செபமாலை மாதா' என்றே அறிமுகப்படுத்தினாள்.

## 3. பரித்தியாகச் செயல்கள்:

பத்திமா காட்சிகளில் பாவப்பரிகாரமாக, பரித்தியாகச் செயல்களை, (தவமுயற்சிகளை) அனுசரிக்குமாறு தேவதாய் கூறினாள். தவமுயற்சிகள் எனக் கூறப்படும்போது, நாம் அஞ்சி நடுங்கத் தேவையில்லை.

எமது நாளாந்த அலுவல்களை, சிறப்பாக கிறிஸ்தவ கடமைகளை, நன்றாக, பிரமாணிக்கமாக செய்யும்போது ஏற்படும் சிக்கல்களை, பிரச்சனைகளை பொறுமையுடன் ஏற்று, கிறிஸ்தவ மதிப்பீடுகட்கிணங்கச் செயற்படும்போது அவையே சிறந்த தவமுயற்சிகளாக அமையலாம்.

தினமும் எம்மை எதிர்கொள்ளும் சிலுவைகளைப் பொறுமையுடனும், கடவுளுக்குப் பணிந்த மனதுடனும் ஏற்று, வாழ்வின் எதிர்புதிர்களிலும், ஏற்றத்தாழ்வுகளிலும் இறைவனின் அன்புக் கரத்தையே காணவேண்டும் என்பது மரியன்னையின் விருப்பம்.

அமைதிக் கேட்டையும், ஒழுங்கு மீறலையும், புரட்சிகளையும், எதிர்ப்புகளையும், நியாயமான அதிகாரத்தின் மேல் வெறுப்பையும் தூண்டிவரும் அலகையின் ஊக்குவிப்புக்கும், மரியன்னையின் அமைதித் திட்டத்துக்கும் உள்ள மாறுபாடுதான் எவ்வளவு?

இத் தவ முயற்சிகளை, பரவலாக மக்கள் ஏற்றுச் செயல்படுவார்களானால் அது பக்தியுள்ள பெற்றோர்களையும், மகிழ்ச்சியும் ஒழுக்கமும் உள்ள மக்களையும், சட்டங்களை மதிக்கும் சமுதாயங்களையும், உலக சமாதானத்தையும் பெற்றுத் தரும்.

எனவே தேவதாய் பத்திமா காட்சிகள் மூலமாக நமக்குக் கொடுத்த சமாதானத் திட்டம், உலகை யுத்தங்களிலிருந்தும், அழிவிலிருந்தும் புரட்சிகளிலிருந்தும் காப்பாற்றும். இருளின் வல்லமைகளை மேற்கொண்டு அன்னையின் மாசற்ற இருதயம் வெற்றி பெறும். ஒரு புதிய கிறிஸ்தவ நாகரிகமும், சரித்திரம் கண்டிராத சமாதானமும் உலகுக்குத் தரப்படும்.

நவீன பரவச தியானிகளும் தேவதாயும்

# புனித மக்சிமிலியன் கொல்பே (1894 — 1941)

இத் தீவினுள் பதினாறாம் நூற்றாண்டில் புகுந்த மிசனரிகள் தேவதாயின் பக்தி நிறைந்த தாசர்களே. அவர்களுள் விசேடமாக பிரான்சிஸ்கன் சபையினர், தம் தந்தை பிரான்சிஸ்குவைப் பின்பற்றி மாதாபக்தியில் நிறைந்து விளங்கினர். இன்று இந்த மண்ணில் மிசனரி ஆர்வம் குன்றி வருவதாயின், உண்மையில் மாதா பக்தியின் வீழ்ச்சியே ஒரு முக்கிய காரணமாகும்.

இரண்டு நவீன உலகப் போர்களின் பின்னணியிலும், அவற்றுக்கு முன்னும், எச்சரிக்கையாக நடந்தேறிய தேவதாயின் தரிசனங்கள், இந்த நவீனப் போர்கள் கொண்டு வந்த மரணங்கள், வேதனைகள், துன்பங்கள், இழப்புக்களைத் தாங்க வேண்டிய மனிதர்களுக்கும் தேவதாய்க்குமிடையே இருக்கும் உறவைச் சுட்டிக்காட்டுகின்றன.

இதற்கு முக்கியமானதோர் எடுத்துக்காட்டு, மக்சிமிலன் கொல்பே என்ற போலாந்து நாட்டுப் புனிதராவர். இவரின் சிறைக்கூட வாழ்வும், தியாக மரணமும் (1941), எல்லோரும் அறிந்த ஒரு கதைதான். ஆயின் இத்தியாக பாதைக்கு அவரை அழைத்து வந்ததன் இரகசியம், அவரது மாதா பக்தியிலேயே தங்கியுள்ளதென்பதை பலரும் அறியவில்லை.

மத்திய கால ஐரோப்பாவில் தம் உடல், உளம், ஆண்மை அனைத்தையும் ஆண்டவனுக்கே அர்ப்பணிக்கும் 'நைற்ஸ்' எனப்படும் ஒரு வீரபரம்பரை தோன்றிற்று. இவ் வீரர்கள் கிறிஸ்துவுக்காகப் போராடுதல் என்ற இலட்சியத்துடன் பல சிலுவைப் போர்களில் பங்குகொண்டனர். இவர்கள் இச்செயலை துறவறம் போன்ற ஒரு இறை அழைத்தலாகவே கருதினர். அமைச்சல், தாழ்மை, கற்பு, என்ற புண்ணியங்களைக் கடைப்பிடித்தனர்.

தாம் பயிற்சி பெற்ற பிரபுவின் அரண்மனையை மோட்சமெனக் கருதி, அங்கிருந்த பிரபுவின் துணைவியான சீமாட்டியின் அன்பைப் பெற்று, அவ்வன்புக்குப் பிரமாணிக்கமுள்ள அடிமைகளாக தம்மை அர்ப்பணித்து, உண்மை, தன்மானம், சுதந்திரம், ஒழுக்கநெறி, கண்ணியம், கடமை, கட்டுப்பாடு ஆகிய மதிப்பீடுகளுக்குத் தம்மை உட்படுத்தினார்.

இவ் வீரர் பட்டியலில் தன்னை இணைத்துப் போராடிய இளைஞர் தான் அசிசியின் அண்ணல் பிரான்சீஸ்கு. பேருஜியப் போரின் பின் மனமாற்றமடைந்து கிறிஸ்துவையும் அவர் அன்னை மரியாளையுமே தமது தெய்வீக விரத்தத்துவத்தின் தலைவன், தலைவியாகக் கொண்டு, ஆன்மீகப் போர் புரியப் புறப்பட்டார் தன்னைப் பின்பற்றியோரை, ''ஆயுதம் தாங்க வேண்டாம், அன்பைப் பூண்டு, நற்செய்தி வழியில், அமைச்சல் முறையில், ஏழ்மையை மணஞ்செய்து, தூய்மையை அணிந்து தெய்வீகப் போருக்குச் செல்வோம்.'' என அறைகூவினார்.

ஆயுதப் போரில் களைத்து சோர்ந்து விரக்தியுற்ற பல இளைஞர்கட்கு உம்பிரியா பள்ளத்தாக்கிலுள்ள புல்வெளிகளினதும், தோப்புகளினதும் குகைகளும், குடிசைகளும் புனித பிரான்சிஸின் வழி நடத்துதலின் கோட்டைகொத்தளங்களாயின. தெய்வீக அரசி மரியாளுக்கே தம்மை அடிமைகளாக்கி, இவ்வுலகை கிறிஸ்து அரசனின் ஆன்மீக ஆளுகைக்கு உட்படுத்துமாறு இவர்கள் வெளிக்கிளம்பினர்.

இப் பிரான்சீசின் ஆன்ம உத்வேகம் எம்மண்ணில் 500 ஆண்டுகட்கு முன் அலைமோதிற்று. 800 ஆண்டுகட்குமுன் போலாந்தில் அலைமோதி உருவாக்கிய பிரான்சீஸ்கன் பாரம்பரியத்திற்குச் சேர்ந்தவரே (1894—1941) மக்சிமிலியன் கொல்பே அவர் தாயார் மரியடபிரே வஸ்கா 1910 ல் போலாந்து தேச கிராக்கோவில் உள்ள கன்னியர் மடத்தில் துறவு பூண்டார். அதைத் தொடர்ந்து மக்சிமிலியனும் பிரான்சீசின் கப்புச்சின் சபையில் தேவதாயின் மாவீரனானார். அவரின் ஆன்மீக தந்தை பிரான்சீஸ் அசிசியாரிடமிருந்தே தேவதாயின் அன்பைப் பெறும் வழிகளை அறிந்து. தன்னை முழுவதும் அந்த ஆண்டவனுக்கே அர்ப்பணித்தார்.

மத்திய கால இத் தெய்வீக பார்வை, 17ம் நூற்றாண்டின் புனிதர் லூயிஸ் தே மொன்பர்ட்டின் ''மரியாளின் உண்மைப் பக்தி'' என்ற தேவதாயின் பரவச தியான நிலைக்கு அடியிட்டது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இவ்வகைத் தியான பள்ளியில் உருவாக்கப்பட்டவரே மக்சிமிலியன்.

தன் சிறிய பராயத்திலிருந்தே மரியாவின் வீரப்பெருந்தகை மரபில் வளர்ந்த இவர், 1918 ல் குருவாக உருவாகி, போலாந்து தொடக்கம் யப்பான் ஈறாக, இறை அரசுக்காக, வெகுசனத் தொடர்புத் துறையில் அயராதுழைத்தார். அச்சகங்களை நிறுவி பிரசுரங்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகளை வெளியிட்டார். வானொலி நிலையங்களை உருவாக்கி அப்போஸ்தலிக்க பணியில் வெற்றி கண்டார். போலாந்தில் அவர் நிறுவிய 'நிர்மலகிரி' ஆச்சிரமமும் யப்பானில் அவர் உருவாக்கிய 'நிர்மல வனம்' ஆசிரமமும் இப் பணிகளில் முழுமூச்சுடன் செயற்பட்டன.

1919 ல் நிர்மலகிரியில் (போலாந்து) இருந்து வெளியிடப்பட்ட 'நிர்மல நாயகியின் மாவீரர்' என்ற மாத இதழ் ஏழு லட்சத்துக்கு மேற்பட்ட பிரதிகளை வெளியிட்டு வந்தது. 1930 ம் ஆண்டில் யப்பானில் நாசகாக்கியின் சிக்கோஷன் மலையடிவாரத்திலுள்ள நிர்மல வனத்திலிருந்து வெளிவந்த நிர்மலமரியின் யப்பானிய மறைவீரர்' என்ற சஞ்சிகையும் பல லட்சம் பிரதிகளைக் கொண்டதாக விருந்தது.

மக்சிமிலியனின் இவ்வெளியீடுகளே, போலாந்து நாட்டில் உலக யுத்தத்தினால் வெகு விரைவில் வரவிருந்த விபரிக்க முடியாத துன்ப துயரங்களையும், அரோசிக அட்டூழியங்களையும் தாங்கிக்கொள்ள மக்களைத் தயார் செய்தன. போலாந்தின் விசுவாசம் எழுச்சி பெறவும் இப் பிரசுரங்கள் வழி வகுத்தன.

இரண்டாம் உலகப் பெருஞ் சமரின் போது யப்பானில் நாசகாக்கி, கிரோசிமா நகர்கள் அணுகுண்டால் அழிக்கப்பட்டபோதும் மக்சிமிலியனின் கட்டிடங்கள் அசையாமலிருந்தன. இன்றுவரை சேவைத்தளங்களாகப் பணிபுரிந்து வருகின்றன.

முதலாம் உலகப் பெருஞ்சமரின் பின் வெற்றிகரமாக விடுவிக்கப்பட்ட போலாந்து மண்ணின் மக்களது துயரையும் வேதனைகளையும் துடைத்து ஆறுதலளித்தபின், வரப்போகும் வேறொரு துன்பசகாப்தத்திற்கு அவர்களை ஆயத்தம்பண்ணும் பொறுப்பையும் தேவதாயிடமிருந்து பெற்ற மக்சிமிலியன் அப்பணியையும் தம் வெகுசனத் தொடர்பு சாதனங்கள் மூலம் வெற்றிகரமாக நிறைவேற்றினார்.

''தேவதாயை எசமாட்டியாக ஏற்று அவளது வழி நடத்துதலில் தம்வாழ்வை அமைத்துக் கொள்பவர்கள், அவள் கொண்டிருந்த விசுவாசம், தங்களிலும் ஊற்றெடுப்பதை உணருவர். அவளது

( 4 ம் பக்கம் பார்க்க )

# தேவதாயின் அற்புத வரலாறு

( 1 ம் பக்க தொடர் )

காண்கிறோம். அகிராடா மரியாளின் 'இறைவனின் நகர்' (CITY OF GOD) என்ற நூலில் இவ் அற்புத வரலாறு தரப்படுகிறது.

வீரமாமுனிவரான தைரியநாத சுவாமிகள் படைத்த 'தேம்பாவணி' என்ற பெரும் காப்பியத்தின் மூலநூலும் இதுவாகும்.

இந் நூலிலிருந்து சில பகுதிகளை சுருக்கமாக, 'தேவதாயின் குரலில்' வெளியிடுகின்றோம். 1847 ல் பதிக்கப்பட்ட இந்நூலின் சுவை குன்றாதிருக்க அதே உரைநடையையே மாற்றமின்றித் தருகின்றோம்.

**தேவமாதா சதா நித்தியகாலமாய் தெய்வ சித்தத்தில் அமைந்ததும், அந்த நாயகியின் பரிசுத்த தந்தை தாயின் வரலாறும் வருமாறு:**

கடவுளானவர் நரர் புத்திக்கெட்டாத தமது இலட்சணங்களை வெளிப் பிரவேசம் பண்ண கரை கடந்த நித்திய காலத்திலே சித்தமாய் இருந்தார். நித்திய வார்த்தையானது பரிசுத்த மனுவுருவோடு தரிசனையாக நிருபித்து சகல படைப்புக்களையும் உண்டுபண்ணா முன்னே, இவருக்குத் தாயாராக வேண்டிய இஸ்திரிக்கு அவசரமான வரங்களை கொடுத்தார். முதலாவது இவ் விருவருக்காகவும், இரண்டாவது பணிவிடைக்காரராகிய மனிதர்களுக்காகவும், வானத்தையும், பூமியையும், கிரகங்களையும், மற்ற ஐம் பூதங்களையும் உண்டுபண்ணினார். சுவாமியினுடைய மகத்துவத்துக்கு முன்னிற்கவும், இவர்களுக்குத் தாசிகம் பண்ணவுஞ் சம்மனசுகளை உண்டு பண்ணினார். அவர் உண்டுபண்ணப் போகிற மனிதன் கெடுவதைத் தமது தூரதிஷ்டியாற் கண்டார். அப்போது நன்மை தின்மை அறிந்து மகா பிரகாசத்தில் உயர்ந்த சம்மனசுக்கள் மனோ சுதந்தரம் உள்ளவர்களாக இருந்தார்கள். தெய்வம் மாம்ஸ அயிக்கமாகப் போகிறதையும், அவருக்கு தாயாராக வேண்டியவளுமாய், மனுக்குலத்தின் மாசு நீக்கி மகாவரப் பிரசாதங் கொண்டவருமான ஒரு இஸ்திரியை, தங்களுக்கு இராக்கினியாய் அங்கீகரித்து நரதேவனை வணங்க வேண்டும் என்றதின் பேரில் லூசிபேரோடு வேறு அநேகரும் எதிர்த்து தெய்வஞ் சொல்லுவது அநியாயமென்றார்கள். தேவன் அவர்களைப் பாதாளத்தில் தள்ளிப் போட்டார். ஆதாம் ஏவாள் உண்டு பண்ணப் பட்டபின் இவர்கள் கெட இவர்கள் சந்ததியில் இரண்டு ஞான வெளிச்சங்கள் உதித்தன. அவ்வெளிச்சங்களே அர்ச் ஜுவாக்கீனும் அன்னம்மாளும். அக்காலத்தில் கபிரியேல் என்னும் சம்மனசானவர் பரிசுத்த அன்னம்மாளுக்குத் தரிசனையாகி நீ ஜுவாக்கீனை மெய் விவாகம் பண்ணிக் கொள்ளத் தேவதிருவுளம் என்றார். அதே பிரகாரம் ஜுவாக்கீனுக்கும் காணப்பட்டு நீ அன்னம்மாளைக் கலியாணஞ் செய்வது தெய்வ கட்டளை என்றார். கலியாணம் முடிந்தபின் இருவது வருடம் பிள்ளையில்லாது இருந்தார்கள். அக்காலத்தில் பிள்ளையில்லாதிருப்பதில் நிந்தை உண்டாம். தெய்வ சித்தத்துக்கு சம்பூரணமான காலம் வந்தடுத்தபோது அன்னம்மாளின் மலடு அற்புதமாய் நீங்கியது. ஜுவாக்கீனுக்கு அறுபத்தாறு வயதும், அன்னம்மாளுக்கு நாற்பத்து நான்கு வயதும் நடக்கும்போது திரித்துவயேக சர்வேஸ்வரன் திருவுளம் பற்றினதாவது, நமது சந்தோஷத்தின் கருமத்தை துவக்க காலமானது, சகலரிலும் நமக்குப் பிரியமான அந்தப் பரிசுத்த சிருஷ்டிப்பை நாம் உண்டு பண்ண வேணும். அவள் நரருடைய சுபாவ நூலை விட்டு நீங்கவும், நரக சற்பம் அவள் மேல் பிடிகொள்ளாதிருக்கவும் வேண்டும். ஒருக்காலும் பாவத்தால் மாசு கொள்ளாத பொருளால் அவள் செய்யப்பட வேணும், நமது திருச்சித்தத்திற்கு இடறு பண்ணுகிறவர்கள் இல்லாமையால் அவளை மகா சாங்கோபாங்கவதியுமாய், மகா பாக்கியவதியுமாய் படைக்க வேண்டும். மனிதர்களுக்கு நன்மாதிரிகையாக நரதேவன் அவளுக்கு கீழ்ப்படிந்திருப்பார். அவள் நூதனமான இரட்சிப்புக் கொண்டு களங்கமற்று ஞான சவுந்தரியாவாள். நரதேவன் தமது மாதாவுக்கும் நித்திய பிதாவுக்கும் இருக்கிற அந்நியோந்நிய சாயலைக் கொண்டு அகமகிழ்வார் என்று சம்மனசுகளுக்கு கடவுள் சொன்னார். இதை அவர்கள் அங்கீகரித்துக் கொண்டு சாஷ்டாங்கமாக விழுந்து அவரை வணங்கினார்கள். வானத்தையும் பூமியையும் செய்யத் தேவனுக்கு இருந்த கவனத்தைப் பார்க்க இந்த தேவலோக இராக்கினியைப் பரிசுத்த அன்னம்மாள் வயிற்றிலமைக்க அவர் அதிக கவனங் கொண்டிருந்தார்.

( வளரும் )

( 3 ம் பக்க தொடர் )

**நவீன மரவச. .**

மறைஉடலாகிய திருச்சபையை அன்பு செய்யவும், ஆண்டவரை மகிமைப்படுத்தவும், அவர் விருப்பத்தை நிறைவேற்றவும் எதையும் செய்யத் தயாராகும் நிலைக்குத் தங்களை உருவாக்குவதை உணர்வர்.'' என்ற மக்சிமிலியனின் கூற்று அவர் வாழ்விலேயே நிறைவுற்றது.

தனது சுபாவதுக்கு ஏற்ப, இறைவனின் மாவீரராகி, மாபெரும் துணிச்சலுடன் வீரதீரச் செயல்கள் பலவற்றில் ஈடுபட்டதன் உச்ச நிலையிலேயே அவர் ஜெர்மனிய நாஜிகளின் கையில் அகப்பட்டு அசுவெஸ் சித்திரவதை முகாமில் தியாகப் பலியாகினார். ''தன் நண்பனுக்காகத் தன் உயிரைக் கொடுப்பதிலும் மேலான அன்பு வேறில்லை'' என்ற நற்செய்தி வார்த்தைகளால் பாப்பிறை 6 – வது சின்னப்பரால் புகழாரம் சூட்டப்படுமளவுக்கு (1971 ஐப்பசி 17) இவரது அயலானை அன்பு செய்யும் தகைமை மிகுந்திருந்தது.

மரியன்னைக்கு தன்னை முற்றாக அர்ப்பணித்த அவர், அவள் காலடியிலிருந்து, கிறிஸ்துவைப் போல் தன்னை வெறுமையாக்கும் சாதனையைக் கற்றுக் கொண்டார். துன்புறும் போலாந்து மக்களை ஈடேற்ற, தன்னையே வெறுமையாக்கி அடிமையின் உரு எடுத்து, மரணம் மட்டும் தன்னைத் தாழ்த்தும் மரியாளின் அடிமை ஆனார்.

கிறிஸ்துவின் மாவீரனாகப் புறப்பட்டு, இறுதியில் ஐந்து காயத்தார் ஆக்கப்பட்ட அசிசியின் அண்ணல் பிரான்சிஸ்குவின் உண்மையானசீடனே இவர். கல்வாரி தொட்டு, அசிசி ஊடாக நவீனப் போர்கள் கொண்டு வரும், ஆசிய ஆபிரிக்க ஐரோப்பிய அமெரிக்க அவுஸ்திரேலிய மண்ணில் எழும்பப்போகும் ஆயிரமாயிரம் சித்திரவதை முகாம்களில் வேதனையுறுவோரின் நம்பிக்கை நட்சத்திரம் புனித மக்சிமிலியன் கொல்பே போன்றவர்களே.

''பலியான செம்மறி, வல்லமையும், செல்வமும், ஞானமும், பலமும், மாட்சியும், மகிமையும், போற்றியும் பெறத் தகுதி உள்ளவர்.'' (திருவெளி. 5:12)

''எனது மாசற்ற இருதயம் இறுதியில் வெல்லும்.'' எனும் வாக்கு, இவர் போன்றோராலேயே நிறைவுறும்.

''புனித மக்சிமிலியனே எம் மண்ணுக்காகவும் மக்களுக்காகவும் வேண்டிக் கொள்ளும்.''

FOR PRIVATE CIRCULATION ONLY Print: Annai Printers, Jaffaa
Published by PAX CHRISTI, St. JOSEPHS ASHRAM, 104. Main st, Jaffna.